முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கடுவெளிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

24.02.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **கேளப்பா அரங்கமகான் உபதேசம்**
**கேட்டுமே தொடர்ந்து வந்தால்**
**காலனை வென்று ஆயுள் கூடி**
**கடைத்தேற்றம் பெறுவது உறுதியப்பா**

2. உறுதிகொண்டு அரங்க மகானை
உயர் குருவாக ஏற்று நன்கு
ஆறுமுகா என வணங்கி வர
அனைவருக்கும் மாற்றம் உண்டெனக் கூறி

3. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
குறையிலா **விளம்பி சாலின் திங்கள்**
**தெரியவே வியதிகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 12ம் நாள் 24.02.2019, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு கடுவெளிச்சித்தர் யானும்**

4. யானும் உலக மக்கள் நலமுற உரைப்பேன்
உண்மை நெறி சத்திய சைவ நெறி
தானாக உலக மக்கள் ஏற்று
தருமபலமிக்க அரங்கமகா ஞானி

5. ஞானியரின் தலைமை ஏற்றுவர
நல்லெண்ணமும் உயர்ந்த சிந்தையும்
கனிவும் பெருகி மக்களுக்கு
கந்தவேலன் அருளும் ஆசியும் கிட்டும்

6. கிட்டுமே மக்களுள் சமத்துவம்
குணபேதம் வஞ்சம் சூழ்ச்சியில்லா
கட்டமில்லா வாழ்வாக மாறும்
காரிய வெற்றி வரும் மக்கள் அடைந்து

7. அடைந்து அருள் பொருள் வளம்
ஆனந்தமான வாழ்வு பெறுவர்
பீடை சோடை என்பதில்லா
பேராசான் அருளால் திடம் பெறுவர்

8. திடமான கொள்கை அருளி
தேசமே வறுமை என்பதில்லா
இடரான சமூக சிக்கலுமில்லா
ஏற்றமான நிலை காண வேண்டி

9. வேண்டியே மக்களை நோக்கி
வேலவன் பூசையாக விழா எடுத்து
தொண்டு பெருக்கி மக்களை
தொண்டர்கள் ஆக்கி வளப்படுத்தும்

10. வளப்படுத்தும் வள்ளலே ஞானியே
வாழும் தவசியே அரங்கனே
அளவிலா உன் தருமவழியே
அகிலத்தை மாற்றம் செய்யவிருக்க

11. இருக்கவே தருமசிந்தை பரவிட
ஏழாம் படை வீடு நோக்கியே
கருத்தாக மக்களெல்லாம் வருகவே
கலியுகம் ஞான யுகமாகும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

—சுபம்—